(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 68.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 ஒக்தோபர் 20, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

3107/2023

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) யாழ்ப்பாணம், நெடுந்தீவில் அமைந்துள்ள சுற்றுலாத் தளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) 2010 தொடக்கம் 2020 வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் நெடுந்தீவுக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மேற்படி சுற்றுலாத் தளங்கள் பராமரிக்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i)இல் குறிப்பிடப்பட்ட சுற்றுலாத் தளங்களில் தற்போது புனரமைக்கப்பட்டுள்ள சுற்றுலாத் தளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி சுற்றுலாத் தளங்களை புனரமைப்புச் செய்வதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதுவரையில் மேற்படி சுற்றுலாத் தளங்கள் புனரமைக்கப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) நெடுந்தீவில் அமைந்துள்ள சுற்றுலாத் தளங்களை முறையாக பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

3174/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நெல் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) ஒவ்வொரு மாவட்டத்திற்குமாக ஒதுக்கப்பட்ட தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iii) ஒவ்வொரு மாவட்டத்திற்குமென ஒதுக்கப்பட்ட தொகையானது மொத்தத் தொகையின் சதவீதமாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்குறித்த காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2022 ஆம் ஆண்டில் நெல் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) 2022 ஆம் ஆண்டில் இன்றளவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள நெல்லின் அளவு யாதென்பதையும்;

(iii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

3234/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியின் “நாணய வழங்கல் நிலவறையில்” வைக்கப்பட்டிருந்த ரூ. 5 மில்லியன் காணாமல் போயுள்ளதா என்பதையும்;

(ii) அதற்குப் பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளங் காண்பதற்காக புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி புலனாய்வு நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாணய வழங்கல் நிலவறையில் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி பாதுகாப்பு கமராக் கட்டமைப்பில் பதிவாகியுள்ள காட்சிகள் தொடர்பில் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

3335/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019 நவம்பர் மாதத்திற்குப் பின்னர் நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சனாதிபதி செயலணியினதும் பெயர், அது நியமிக்கப்பட்ட திகதி, இன்றளவில் நடாத்தியுள்ள கூட்டங்களின் எண்ணிக்கை, அங்கத்தவர்களின் பெயர்கள், அவர்களுடைய பதவிகள், தகைமைகள்,செலுத்தப்பட்டுள்ள சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்படுகின்ற ஏனைய வசதிகள்;

(ii) மேற்படி ஒவ்வொரு செயலணி மூலமாகவும் நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள்;

(iii) மேற்படி குறிக்கோள்களை அடைந்து கொள்வதிலுள்ள முன்னேற்றம்;

என்பன வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

3338/2023

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 யூலை வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதன் காரணமாக தொழில் இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 2015.12.31ஆம் திகதி வரை ஒரு வேலை நிறுத்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட 6,000.00 ரூபா மாதாந்தக் கொடுப்பனவுக்குப் பதிலாக 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளின் பிரகாரம் ஒரே தடவையில் மாத்திரம் செலுத்தித் தீர்க்கப்படும் 250,000.00 ரூபா தொகையை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது என்பதையும்;

(ii) அதற்கமைய, 2022 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் வரை 65 வயதினைப் பூர்த்தி செய்த வேலை நிறுத்தக்காரர்களுக்கு மேற்படி தொகை உரியவாறு செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) 2023 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் இதுவரை 65 வயதினைப் பூர்த்தி செய்த எந்தவொரு வேலை நிறுத்தக்காரருக்கும் அத்தொகை செலுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வேலை நிறுத்தக்காரர்களுக்கு மேற்படி தொகையை மீண்டும் செலுத்தும் பணியை ஆரம்பிக்கவுள்ள திகதி யாது;

(ii) அவர்களுக்கு மேற்படி தொகை செலுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

3350/2023

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இன்றளவில் பணியாற்றுகின்ற பிரதான சிற்றூழியர் மேற்பார்வையாளர் 16 வருடங்களுக்கும் அதிகமான காலம் மேற்படி வைத்தியசாலையில் பணியாற்றுகின்றார் என்பதையும்;

(ii) அவரால் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறுபட்ட ஒழுங்கீனச் செயற்பாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை இடை நடுவில் நிறுத்துவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பணியாளர் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவரால் மேற்கொள்ளப்படுகின்ற முறைகேடுகளையும் ஒழுங்கீனச் செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

3355/2023

கௌரவ ஜயந்த சமரவீர,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொல்லியல் பிரதேசமாக வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரகடனப்படுத்துவதற்கு தொல்பொருள் திணைக்களத்தால் இன்றளவில் அடையாளம் காணப்பட்டுள்ள தொல்லியல் பிரதேசங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தொல்லியல் பிரதேசத்தின் பெயர், அமைந்துள்ள மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலகப் பிரிவு என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) இன்றளவில் வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தொல்லியல் பிதேசங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு தொல்லியல் பிரதேசத்தின் பெயர், அமைந்துள்ள மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலகப் பிரிவு என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொல்லியல் பிரதேசமாக இதுவரை வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரகடனப்படுத்தப்படாத தொல்லியல் பிரதேசங்களை வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரகடனப்படுத்துவதற்கு காலச்சட்டகமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி காலச்சட்டகம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

3366/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக மரணித்தவர்கள் சார்பில் அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இத்தாக்குதல் காரணமாக பெற்றோரை இழந்த பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அப்பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக அவர்களின் உறவினர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவொன்று செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) இத்தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அரச அனுசரணையில் வெளிநாட்டுச் சிகிச்சைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

3483/2023

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு உரித்தான தோட்டக் காணிகளில் பாற்பண்ணைகளை நிறுவுவதற்கு 2021.09.06 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஆமெனில், இதற்கென “கலபொட” மற்றும் “மவுண்ட் ஜீன்” ஆகிய ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் காணிகளின் அளவு ஏக்கர்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இக் காணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு கம்பெனியினதும் பெயர், அக்கம்பெனிகளின் பணிபாளர்களின் பெயர்கள், அவர்களின் தேசியம் (உள்நாட்டவரா/வெளிநாட்டவரா) என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கம்பெனியினால் செலுத்தப்படும் முற்பணத் தொகை மற்றும் ஒரு ஏக்கருக்கான வருடாந்த குத்தகைத் தொகை என்பன வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தோட்டங்களில் பாற்பண்ணைக்காக ஒதுக்கப்படும் நிலப்பரப்பில் அமைந்துள்ள லயன் வீடுகளினதும் வணக்கஸ்தலங்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி தோட்டங்கள் அமைந்துள்ள மாவட்டங்களில் உள்ள அரச பாற்பண்ணைகளிடம் போதியளவு காணிகள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி தோட்டக் காணிகளை பாற்பண்ணைகளுக்காக வழங்கப்பட்டதன் அடிப்படை யாதென்பதையும்;

(iii) அப் பாற்பண்ணைகளை நிறுவுவதற்காக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

3505/2023

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டிற்கான உயர்கல்விக்கான மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட மொத்த ஒதுக்கீட்டில் இருந்து மூலதனச் செலவினத்திற்காகவும் மீண்டெழும் செலவினத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட நிதிகளின் சதவிகிதத்தினை வெவ்வேறாகவும்;

(iii) மேற்குறிப்பிட்ட ஒதுக்கீட்டில் இருந்து தற்போது மூலதனச் செலவினத்திற்காகவும் மீண்டெழும் செலவினத்திற்காகவும் விடுவிக்கப்பட்டுள்ள நிதிகளை வெவ்வேறாகவும்;

(iv) 2019 முதல் 2023 வரையான காலப்பகுதியின் போது அரச பல்கலைக்கழகங்களில் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிதிகளை வெவ்வேறாகவும்;

(v) 2021 முதல் 2023 வரையான காலப்பகுதிக்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகம், இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம், இலங்கை வாழ்க்கை தொழில் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனம் - கட்டுநாயக்க, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிதிகளை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— தேசிய நீரளவை,— 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேச சமவாயத்தின்கீழான இலங்கையின் குறித்தசில குறிப்பிட்ட கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்காகவும்; தேசிய நீரளவைசார் அலுவலகத்தைத் தாபிப்பதற்காகவும்; நீரளவைசார் அளவையாளர்களையும் கப்பல்துறைசார்ந்த நிலப்படவியலர்களையும் பதிவுசெய்வதற்காகவும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமுலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— ஊழல் எதிர்ப்பு (திருத்தம்),— 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 9.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 3 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 222 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 527 ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 17 ஆம் திகதிய 2323/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்,— அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 1995 ஆம் ஆண்டுக்கான 35 ஆம் இலக்க, அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 4(1)(ஊ) ஆம் பிரிவின் கீழ், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 2294/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2023 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 2354/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*4.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 27, 36, 37, 39, 40 மற்றும் 64 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவினதும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளினதும் கலந்தாலோசனையுடன், முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 07 ஆம் திகதிய 2339/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப்பொறுப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

ஒதுக்கீடு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*17.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் உடன்பாட்டுடன் பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 21 ஆம் திகதிய 2341/63 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 2347/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

21.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

22.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

"மாத்தறைப் பருவம்" அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.
பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
இலங்கை மருந்தியல் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

2399/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை அநுராதபுர மாவட்டத்தில் வாவிகளுக்கு/நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்பட்ட நன்னீர் மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மூலம் பெறப்பட்ட மீன் அறுவடை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி வாவிகளுக்கு/நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்பட்ட மீன் குஞ்சுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பெறப்பட்ட மீன் அறுவடை தொடர்பில் திருப்தியடைகின்றாரா என்பதையும்;

(iii) சிறிய வாவிகளைச் சார்ந்ததாக நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

2401/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நிரப்பு நிலையங்களின் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிரப்பு நிலையங்களுள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இந்தியன் எண்ணெய்க் கம்பனி ஆகியவற்றுக்குச் சொந்தமான நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அநுராதபுரம் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள எரிபொருள் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(i) மேற்படி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் முகவரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈட்டிய வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்குறித்த அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கருத்திற்கொண்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

2857/2023

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் துணைமைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி யாது என்பதையும்;

(iii) மேற்படி பணியாட்டொகுதியில் நிறைவேற்று மற்றும் கனிஷ்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) நிறைவேற்று மற்றும் கனிஷ்ட பணியாட்டொகுதிகளில் காணப்படுகின்ற ஒவ்வொரு பதவிக்கும் உரித்தான மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு ஊழியர் மற்றும் அவரின் குடும்பத்திற்காக வழங்கப்பட்டுள்ள காப்புறுதி உரித்தின் பெறுமதி தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

3647/2023

கௌரவ வடிவேல் சுரேஷ்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முத்தியங்கனை ரஜமஹா விகாரை, மஹியங்கனை ரஜமஹா விகாரை, மற்றும் கதிர்காமம் கொயில் என்பவை ஊவா மாகாணத்தில் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) சமய மற்றும் கலாசார விழுமியங்களுடன் கூடிய சமூகமொன்றை உருவாக்கும் நோக்கில் பதுளை மாவட்டம் உட்பட ஊவா மாகாணத்தில் பல ரஜமஹா விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள ரஜமஹா விகாரைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) தொல்பொருள் சட்டங்களுக்கு அமைவாக மேற்படி ரஜமஹா விகாரைகள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றனவா என்பதையும்;

(iv) பசறை, போகொடை, தோவ, முத்தியங்கனை மற்றும் மஹியங்கனை ரஜமஹா விகாரைகளையும் ஏனைய ரஜமஹா விகாரைகளையும் பேணிப் பாதுகாப்பதற்காக இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பௌத்த மக்களுடைய சமய கலாசார பின்னணிக்கமைவாகவும் வரலாற்றுச் சிறப்புமிக்க மரபுரிமையைப் பாதுகாக்கும் வகையிலும் மேற்படி பேணல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மரபுரிமைகளை எதிர்காலச் சந்ததியினரின் நலன் கருதி பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

3678/2023

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1997.01.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31 ஆம் திகதி வரை ஓய்வுபெறச் செய்யப்பட்ட;

(ii) 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் 2020.12.31 ஆம் திகதி வரை ஓய்வுபெறச் செய்யப்பட்ட;

(iii) 2021.01.01 ஆம் திகதி தொடக்கம் 2021.12.31 ஆம் திகதி வரை ஓய்வுபெறச் செய்யப்பட்ட;

(iv) 1997.01.01 ஆம் திகதி தொடக்கம் 2021.12.31 ஆம் திகதி வரை ஓய்வுபெறச் செய்யப்பட்டதன் பின்னர் 2021.12.31 ஆம் திகதியளவில் மரணமடைந்துள்ள;

இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த அலுவலர்களின் எண்ணிக்கையினை ஒவ்வொரு சேவைக்கமைவாக வெவ்வேறாக எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 1997.01.01 ஆம் திகதி தொடக்கம் 2021.12.31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் விதவைகள் அநாதைகள் / தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொண்ட ஆட்களின் எண்ணிக்கை மேற்குறித்த ஒவ்வொரு சேவை மற்றும் ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?